முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

| | | |
|---|---|---|
| P.W.1 – பிரவீன் குமார் | HMOP. No.139/2024 | 30.07.2026. |

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

குறுக்கு விசாரணை :–

2018 ஜீலை 15 ம் தேதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பூ வைத்து திருமண நிச்சயம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அப்போது இரு வீட்டு பெரியவர்களும் , உறவினர்களும் சமூகத்தாரும் உடனிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்திலேயே எனக்கு விபத்தில் கையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. எதிர்மனுதாரரின் தாயாரும் போலியாவால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தாயாரை எதிர்மனுதாரரும் அவரது தகப்பனாரும் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். நிச்சயத்திற்கு பிறகு 4 மாதங்கள் கழிந்து திருமணம் நடந்தது என்றால் சரிதான். நிச்சயத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட 4 மாதங்களில் செயற்கை கை பழுது பார்ப்பதற்காக திருச்சி வந்த போது எதிர்மனுதாரர் உடன் வந்தார். திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் M.Sc., படித்து வந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நெய்வேலியில் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தோம். எனது பெற்றோர் நெய்வேலியில் வேறு குடியிருப்பில் இருந்தார்கள். திருமணத்தின் போது எதிர்மனுதாரருக்கு 31 பவுன் நகையும் ரூ.1,20,000/– மதிப்புள்ள பீரோ, கட்டில், மெத்தை, ஏசி ஆகியவை கொடுக்கப்பட்டது என்றால் 31 பவுன் நகை இல்லை. அவருக்கு அணிவிக்கப்பட்ட நகைகளை அவர் எடுத்து சென்று விட்டார். பீரோ, கட்டில், மெத்தை, ஏசி போன்ற பொருட்கள் எதுவும் சீராக கொடுக்கப்படவில்லை. நானும் எதிர்மனுதாரரும் நெய்வேலியில் சந்தோசமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நெய்வேலியில் என்னுடன் மூன்று மாதங்கள் இருந்தார். விருதுநகரில் படித்து கொண்டிருந்ததால் நான் தான் வாரம் ஒரு முறை அங்கு சென்று பார்த்து வருவேன். வளைகாப்பு நிகழ்ச்சி விருதுநகரில் நடத்தப்பட்டது என்றால் சரிதான். தலைதீபாவளிக்கு நான் விருது நகர் வந்திருந்தேன். நான் பெற்றோர் சொல்பேச்சை கேட்பேன் என்றால் சரிதான். தலைதீபாவளிக்கு நான்

வந்திருந்த போது எதிர்மனுதாரரின் பெற்றோருடன் பிரச்சனை ஏற்பட்டு நான் எதிர்மனுதாரரை அழைத்து கொண்டு நெய்வேலி வந்து விட்டேன் என்றால் சரியல்ல. தகராறு எதுவும் ஏற்படவில்லை. தீபாவளி முடிந்து எதிர்மனுதாரருடன் நெய்வேலி வந்து விட்டேன். நான் எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் 50 பவுன் நகையும் ரூ.10,00,000/- பணமும் வரதட்சணையாக கேட்டேன் என்றாலும் அதனால் எதிர்மனுதாரர் விருதுநகருக்கு வந்துவிட்டார் என்றாலும் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு எதிர்மனுதாரர் நெய்வேலிக்கு வந்தார் என்றால் ஆரம்பத்தில் நெய்வேலிக்கு வர மறுத்துவிட்டார். நான் தான் அவரை அழைத்து வந்தேன். குழந்தை பிறந்து 3 1/2 மாதங்கள் கழிந்து நெய்வேலி வந்த எதிர்மனுதாரர் 10 நாட்கள் தான் அங்கிருந்தார். எதிர்மனுதாரர் குழந்தையுடன் நெய்வேலி வந்தபோது எனது வீட்டில் எனது சகோதரி அவரது குழந்தையுடன் இருந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தனிக்குடித்தனம் இருந்தோம். எனது பெற்றோர் வசித்த வீட்டில் எனது சகோதரி குழந்தையுடன் வந்திருந்தார். நான் எனது குழந்தையுடன் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றிருக்கிறேன். எனது பெற்றோர் வீட்டிற்கும் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கும் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் எனது குழந்தையை எனது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்ற போது எனது சகோதரியின் குழந்தையும் அங்கிருந்ததால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் அலுவலக குடியிருப்பிற்கு பின்புறம் எனது அலுவலகம் உள்ளது. நான் காலை அலுவலகம் சென்றால் மதியம் உணவிற்காக வீட்டிற்கு வருவேன். பின்னர் மாலை 05.30 மணிக்கு வருவேன். குழந்தை பிறந்த 100 வது நாளை எனது தகப்பனார் வீட்டில் கேக் வெட்டி கொண்டாடினோம். அனைவரும் மகிழ்ச்சியாக தான் இருந்தோம். நான் அலுவலகம் செல்லும் போது எதிர்மனுதாரரை குழந்தையுடன் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்லும் படி சொன்னேன் என்றால் சரியல்ல. குழந்தையை எதிர்மனுதாரர் தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். 10 நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் நெய்வேலியில் உள்ள அவரது பெரியம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். இரண்டு நாட்கள் கழித்து எதிர்மனுதாரரின் தகப்பனார் வந்து

எதிர்மனுதாரரை அழைத்து சென்றார் என்றால் அழைத்து சென்றதாக சொன்னார்கள் . நான் எதிர்மனுதாரரை அழைக்க சென்றபோது என்னை அவரது பெரியம்மா வீட்டிற்குள் விடவில்லை. மறுநாள் எனது பெற்றோரை அழைத்துக் கொண்டு சென்று பேசியபோது எதிர்மனுதாரர் இனி சேர்ந்து வாழ வரமாட்டார் என சொன்னார். நான் தான் எனது பெற்றோரின் பேச்சை கேட்டுக் கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என சொன்னேன் என்றால் சரியல்ல. பின்னர் எதிர்மனுதாரரை 20 நாட்கள் கழித்து விருதுநகரில் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்து அவரது தாயாருடன் அழைத்து வந்தேன். அவரது தாயார் ஊனமுற்றவர் என தெரிந்தும் அவரை நான் சரியாக கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. அவருக்காக தனியாக ஏசி வைத்துக் கொடுத்தேன். அப்போது ஏற்பட்ட தகராறில் நான் எதிர்மனுதாரரின் செல்போனை உடைத்து விட்டேன் என்றாலும் ஏசி, டிவி ரிமோட்டை மறைத்து வைத்துக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் வீட்டில் இருந்த போது நான் அவர்களை வீட்டிற்குள் வைத்து பூட்டி விட்டு சாவியை எடுத்துக் கொண்டு அலுவலகம் சென்று விடுவேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மூன்று நாட்கள் தான் என்னுடன் இருந்தார். அந்த சமயம் கொரோனா காலம் என்றால் சரிதான். அதன்பிறகு எதிர்மனுதாரர் விருதுநகரில் இருந்த போது எனது தாத்தா தவறிவிட்டார் என்றால் சரிதான். அந்த இறுதி சடங்கிற்கு எதிர்மனுதாரர் வந்திருந்தார். எதிர்மனுதாரரின் சகோதரரின் திருமணத்திற்கு சென்றபோது என்னென்ன நகைகளை அவர் எடுத்துச் சென்றார் என எழுதி வாங்கினோம் என்றால் எதிர்மனுதாரர் வாழ முடியாது என சென்றபோதே நகைகளை எடுத்து கொண்டு எழுதிக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். அவ்வாறு எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த ஆவணம் என்னிடம் உள்ளது. 2021 ல் பாட்டி இறந்த போது எதிர்மனுதாரர் நெய்வேலி வந்தார். அப்போதும் 3 நாட்கள் இருந்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகார் சம்மந்தமாக விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு வந்தபோது எதிர்மனுதாரரையும் அவரது சகோதரரையும் நான் தவறாக பேசினேன் என்றால்

சரியல்ல. அதைப்பார்த்த காவல் துறையினர் என்னை எச்சரித்தார்கள் என்றால் சரியல்ல. நான் விவாகரத்து கோரி நெய்வேலியில் வழக்கு தாக்கல் செய்தி்ருந்தபோது எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கோரி ஒரு வழக்கும், குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் ஒரு வழக்கும் விருதுநகரில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். எனது விவாகரத்து வழக்கு நெய்வேலியில் இருந்து விருதுநகருக்கு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மாற்றப்பட்டது என்றால் சரிதான். விருதுநகரில் எனது வழக்கு விசாரணைக்கு வந்தபோது சமரச பேச்சுவார்த்தைக்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். அந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச வழக்கும் குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழான மனுவும் வாபஸ் பெறப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் நான் எதிர்மனுதாரரை சென்னைக்கு அழைத்து சென்று குடும்பம் நடத்தினேன் என்றால் சரிதான். அங்கும் எதிர்மனுதாரர் 3 நாட்கள் தான் இருந்தார். சென்னையில் எனது குழந்தைக்கு பள்ளியில் அட்மிஷன் பெறப்பட்டது என்றால் சரிதான். அங்கு தகராறு ஏற்பட்டு எதிர்மனுதாரர் விருதுநகர் வந்தார் என்றால் சரிதான். விருதுநகரில் எங்களுக்கும் சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு விருதுநகரில் உள்ள எனது வீட்டில் வைத்து சமரச பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. அப்போது எனது சகோதரியும் தாயாரும் குழந்தையை தனியாக அழைத்து சென்று எப்படி சொல்ல வேண்டுமென குழந்தையை மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் எதிர்மனுதாரரிடம் கூடுதல் வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்திய போது கூடுதல் வரதட்சணை தருவார்கள் என சொல்லுமாறு எதிர்மனுதாரரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. தகராறு ஏற்பட்டு எதிர்மனுதாரர் அவரது வீட்டிற்கு செல்வதும் பின்னர் சமாதானம் ஆகி சேர்ந்து வாழ்வது என பலமுறை நடந்துள்ளது என்றால் சரிதான். தற்போதும் 20 நாட்களுக்கு முன்பு எதிர்மனுதாரரை அவரது கைபேசியில் அழைத்து சேர்ந்து வாழ வருமாறு அழைத்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வர மறுத்துவிட்டார். எதிர்மனுதாரர்

சேர்ந்து வாழ வந்தால் அவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். நான் எனது பெற்றோரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தான் நான் எதிர்மனுதாரரை அடித்து விரட்டி விடுகிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ல் எதிர்மனுதாரர் நகைகளை பெற்றுக் கொண்டதாக உள்ளது என்றாலும் நகைகளை பெற்றுக் கொண்டு வீட்டை விட்டு செல்வதாக இல்லை என்றாலும் சரிதான். எதிர்மனுதாரர் தற்போதும் தாலி அணிந்துள்ளார் என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

ஒப்பம்/– திரு. P.கௌதமன், B.A., B.L.,
முதன்மை சார்பு நீதிபதி
திருச்சிராப்பள்ளி